
இதுதான் 'திராவிட மாடல் அரசு'

# மின்துறை அமைச்சருக்கு நன்றி - பாராட்டு!

## பீட்டர் அல்போன்ஸ் புகழாரம்!



சென்னை, ஜுன் 21-

தமிழ்நாடு மின்துறை அமைச்சர் துரிதகதியில் செயல்பட்ட விதம் குறித்து காங்கிரஸ் எம்.பி. பீட்டர் அல்போன்ஸ் தமது வலைதளப் பக்கத்தில் பாராட்டு தெரிவித்துள்ளார்.

அது வருமாறு:-

நேற்று காலையில் ஒரு முக்கியமான மேனாள் காவல்துறை உயர் அதிகாரி வாட்ஸ்அப்பில் ஒரு வீடியோ அனுப்பியிருந்தார்.

சென்னை அண்ணா நகரில் ரூ. 4000 மின்கட்டணம் கட்டப் போன ஒரு பெண்ணிடம் ஒருநாள் காலதாமதத்திற்காக ரூ.14000 கட்டவேண்டும் என மின்வாரியம் வற்புறுத்துவதாக கண்ணீர் மல்க புலம்புவதும் அதனைத் தொடர்ந்து ஒருவர் “இதுதான் திராவிட மாடல் அரசு”என கிண்டலடிப்பதும் அந்த வீடியோவில் வந்தது.

அதனை அப்படியே புதிய மின்துறை அமைச்சர் தங்கம் தென்னரசுவிற்கு பார்வார்ட் செய்தேன். மூன்று நிமிடங்களில் அமைச்சர் அதனை கவனிப்பதாக பதில் அனுப்பினார்.

இன்று காலையில் அமைச்சர் மீண்டும் அழைத்தார். சம்பந்தப்பட்ட பெண்ணின் இணைப்புக்கு, கோடை கால மின்பயன்பாடு இருப்பதால் கூடுதல் கட்டணம் வந்துள்ளது. அதன் அடிப்படையில் வைப்புத்தொகை (deposit) கணக்கிட்டு கட்டச்சொல்லியுள்ளனர். ஒரு மாத பயன்பாட்டின் அடிப்படையில் வைப்புத்தொகை வசூலிக்கக் கூடாது என்றும், ஒருவருட பயன்பாட்டின் அடிப்படையில்தான் வசூலிக்க வேண்டும் என்று அமைச்சர் உடனடியாக உத்தரவிட்டுள்ளதாக என்னிடம் தெரிவித்தார்.

இதுதான் “திராவிட மாடல் அரசு” அமைச்சருக்கு நன்றியுடன் பாராட்டும்.

இவ்வாறு அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் ஜனநாயகத்தைக் காத்திட

# கலைஞருக்கு புகழ் சேர்த்திடும் பணியை இன்றே தொடங்குவோம்!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பு!

சென்னை, ஜுன் 21-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**திருவாரூர்த் தேரழகைத் தன்னகத்தே கொண்ட பேரழகாம் கலைஞர் கோட்டத்தின் திறப்பு விழா, கலைஞர் பிறந்த மண்ணில்!**

**கவியரங்கம், பட்டிமன்றம், பாட்டரங்கம், வாழ்த்தரங்கம் எனச் சொற்களாலும் எழுத்துகளாலும் நம் எண்ணங்களில் நிலைகொண்டு எங்கும் நிறைந்து விட்ட முத்தமிழ் வித்தகர் கலைஞர் 100இல், மாண்புமிகு பீகார் மாநில துணை முதலமைச்சர் தேஜஸ்வி யாதவ் அவர்களோடு கலைஞர் கோட்டம் திறந்து வைத்தோம்.**

**நீடுபுகழ் கலைஞரின் வண்மையைக் காட்சிப்படுத்தும் இந்த எழிலோவியம் அமையக் காரணமான அனைவர்க்கும் என் நெஞ்சார்ந்த நன்றி!**

**தலைவர் கலைஞரின் கொள்கை வாரிசுகளே!**

**இந்தியாவின் ஜனநாயகத்தைக் காத்திடும் வரலாற்றுக் கடமையை நிறைவேற்றிக் கலைஞருக்குப் புகழ்சேர்த்திட இன்றே பணி தொடங்குவோம்! இலட்சியம் வெல்வோம்! நாட்டைக் காப்போம்!**

**நாற்பதும் நமதே! நாடும் நமதே!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

கீழையூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர்

# ஆ.தாமஸ் ஆல்வா எடிசன் சகோதரர் மணவிழா!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமை!

*நாகை.ஜுன். 21-*

*.நாகை மாவட்டம் கீழையூர் கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளரும், வேளாங்கண்ணி பேரூராட்சி துணைத்தலைவர் ஆ.தாமஸ்ஆல்வா எடிசன், வேளாங்கண்ணி பேரூராட்சி தலைவர் ஏ.எல். டயானாசர்மிளா ஆகியோரது சகோதரரும் நாகை மாவட்டம் கீழ்வேளூர் தாலுகா வேளாங்கண்ணி பி.ஆரோக்கியராஜ் -ஜெயமேரி இணையரின் மகன் ஏ.மரியசூசைநிக்சன், திருவாரூர் மாவட்டம் திருவாரூர் காப்பனாமங்கலம் எஸ்.வி.ஜெயராஜ் -ஹெல்ன் ரோஸி இணையரின் மகள் ஜெ.பெபின் ஆகியோர் திருமணம் வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை பேராலயத்திலும், வேளாங்கண்ணி ஆர்ச் அருகே இ.சி.ஆர். மெயின் ரோடு பாலத்தடி அருகே அமைக்கப்பட்டுள்ள கலைஞர் அரங்கில் நாளை (22.06.2023 - வியாழன்) பிற்பகல் 12 மணிக்கு நடைபெறுகிறது.*

*'திருமண விழாவில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் வரவேற்புரையாற்றுகிறார்.*

*கல்வித்துறை அமைச்சரும், திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளருமான அன்பில் மகேஷ்பொய்யாமொழி, சட்டத்துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, சுற்றுச் சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் இரா.முத்தரசன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*மணமக்கள் ஏ.மரிய சூசைநிக்சன்- ஜெ.பெபின் திருமணத்தை கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் தலைமை தாங்கி நடத்தி வைக்கிறார்.*

*திருமண விழாவில் மாநில கிறிஸ்துவ நல்லெண்ண இயக்க தலைவர் கோ.இருதயராஜ், கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம்கலை, திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், தாட்கோ தலைவர் உ.மதிவாணன், மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம். முருகன் எம்.எல்.ஏ., புதுக்கோட்டை மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ராமலிங்கம், தமிழ்நாடு அரசு தலைமை கொறடா கோவி.செழியன் எம்.எல்.ஏ., உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், நாகை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராஜ், சட்ட மன்ற உறுப்பினர்கள் கீழ்வேளூர் நாகைமாலி, சீர்காழி எம். பன்னீர்செல்வம், நாகை முகமதுஷநவா, ந.தியாகராஜன், காரைக்கால் மாநில அமைப்பாளர் ஏ.எம்.எச். நாஜீம், சென்னை மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் கே.எஸ்.இரவிச்சந்திரன், மாநில இலக்கிய அணி செயலாளர் கவிதைப்பித்தன், கழக செய்தி தொடர்பாளர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் ந.இளையராஜா, கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க. அன்பழகன், மாநில தீர்மானக்குழு உறுப்பினர் என். வி.காமராஜ், கழக விவசாய அணி துணைத்தலைவர் எஸ்.கே.வேதரத்தினம், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நாகை அ.அசோகன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் வி.மாரிமுத்து, மாநில கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் ஜி.பழனிச்சாமி,*

*மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணைச் செயலாளர் இரா.சங்கர், மாநில விவசாயத் தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக.வீரப்பாண்டியன், கழக விவசாயத் தொழிலாளர் அணி துணைத் தலைவர் த.சந்திரசேகரன், கூட்டணிக் கட்சி மாவட்ட தலைவர், செயலாளர்கள் திராவிட கழகம் நெப்போலியன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சிவகுருபாண்டியன், ம.தி.மு.க. வெ.ஸ்ரீதரன், காங்கிரஸ் கட்சி ஆர்.என். அமிர்தராஜா, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு துணைச் செயலாளர் மு. சாகுல்அமீது, இந்திய கம்யூனிஸ்ட்டு கட்சி மயிலாடுதுறை மாவட்டச் செயலாளர் அ.சீனிவாசன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி கதிர்நிலவன், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் எம்.எம்.சித்திக், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தராசன், இல.மேகநாதன், க.ராஜேந்திரன், க.மறைமலை, மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி. மனோகரன், மாவட்டக் கழகக் கழக அவைத் தலைவர் ப.செல்வம், துணைச் செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன், ஆரூர் மணிவண்ணன், கற்பகம் மாவட்டக் கழகப் பொருளாளர் மு. லோகநாதன், பொதுக்குழு உறுப்பினர்கள் எல்.எஸ்.ஈ. பழனியப்பன், எம்.பன்னீர் செல்வம்,உமாசெந்தாமரை செல்வன், கோ.சி.குமார், எம்.பாண்டியன், இல.பழனியப்பன், எஸ்.வி.டி.சார்லஸ், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மகா.குமார், ஆர். டி.எஸ்.சரவணன், செல்வ. செங்குட்டுவன், சிக்கல் என்.ஆனந்த், கே.பழனியப்பபன், என்.சதாசிவம், உதயம் எம்.முருகையன், சோ.பா.மலர்வண்ணன், நகரக் கழகச் செய லாளர்கள் இரா.மாரிமுத்து, மா. மீ.புகழேந்தி, எம்.ஆர்.செந்தில்குமார், பேரூர் கழகச் செயலாளர்கள் கா.அட்சயலிங்கம், மரியசார்லஸ், முகமது சுல்தான், சுப்பிரமணியன், மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரி சங்கர், துணைத்தலைவர் ஆர். அஜிதா, ஒன்றியக் குழு தலைவர்கள் செல்வராணிஞானசேகரன், வாசுகி நாகராஜன், ஆர்.ஜி.தமிழரசி, பேரூராட்சி தலைவர்கள் ஏ.எல்.டயானாசர்மிளா, இந்திராகாந்தி சேகர், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கழகசெயல்வீரர்கள் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொள்கின்றனர்.*

*முடிவில் கீழையூர் ஒன்றியக் கழகச் செயலாளர் ஆ.தாமஸ்ஆல்வாஎடிசன் நன்றி கூறுகிறார்.*

என்.மருதுகணேஷ் தலைமை!

# ஜார்ஜ் டவுன் நீதிமன்ற வழக்கறிஞர்கள் சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா!

## என்.ஆர்.இளங்கோ எம்.பி. பங்கேற்பு!

*சென்னை ஜுன்:21*

*முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாளையொட்டி சென்னை வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி மற்றும் ஜார்ஜ் டவுன் நீதிமன்ற கழக வழக்கறிஞர்கள் சார்பில் ஜார்ஜ் டவுன் நீதிமன்றம் அருகே பிறந்தநாள் விழா நடைபெற்றது.*

*இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் என். மருதுகணேஷ் தலைமை தாங்கினார்.*

*சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. பங்கேற்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி புகழஞ்சலி செலுத்தி, கேக் வெட்டி இனிப்பு வழங்கினார்.*

*முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாளையொட்டி மரக்கன்றுகளை நட்டு வைத்தார்.அதன்பின் ஜார்ஜ் டவுன் நீதிமன்ற இளம் வழக்கறிஞர்களுக்கு சட்டப் புத்தகங்களை இலவசமாக வழங்கினார்.*

*இந்நிகழ்ச்சியில் கழக வழக்கறிஞர் டி.போஸ், கே. பொம்முராஜ், ஜெ. இராஜேந்திரன், எஸ்.பி. எஸ்.புத்தன், ஜெ.காணிக்கைநாதன், ஆர்.நடராஜன், எஸ்.சேகர், எஸ்.சரவணகுமார், ஜெ.தரணிதரன், எஸ்.ராஜேஷ், திருவொற்றியூர் போஸ், டி. மகாராஜன், எம்.ஜெய்சங்கர், எஸ்.தனசேகரன், ஏ. கே.உமாசங்கர், எச்.கருணாகரன், சி.ஸ்ரீதர்,மா. ரூப சங்கர், எஸ்.சசிதரன், எம்.பாக்கியராஜ், வி. கார்த்திக், டி.சீனிவாசன், எஸ்.எம்.டி.ரவிச்சந்திரன்டி, ஜெயசேகர், இ.வெங்கடேஷ்,குமார், ஆர்.வேலுச்சாமி, டி.மதன்ராஜ், ராயபுரம் கோகுல், ராயபுரம் பிரபாகரன், ஏ.விந்தன், கே.பழனியப்பன், எஸ்.லக்ஷ்மிபதி, டி.சக்திவேல், எம்.யாசர் அராபத், எஸ்.பீட்டர், வெற்றிச் செல்வன், எஸ். மதியழகன், எஸ்.மோகனசுந்தரம், ஏ.சாந்தகுமார், என்.யுகநாதன், கே.புருஷோத்தமன், ஆர்.வெங்கடேஸ்வரன், ஆர்.சந்தோஷ், ஆர்.மகேஸ்வரன், கே.ஆர்.காளிதாஸ் , ஆர். நரசிம்மமூர்த்தி, டி.சுகுமார், வி.பி.வீரமணி, எஸ். குணசேகர் எஸ்.சரவணன், எஸ்.ராஜ், எஸ்.கரீம், எஸ். அசோக், ஜே.கிளமன்ஸ், சுகன்யா சீனிவாசன், ஜி. காமேஷ், என்.நித்யராஜ், ஏ.சுதாகர், டி.நாகராஜன், பி.தீபக், என்.சங்கர்கணேஷ், எஸ்.சரத்குமார், கே.விஜய்,வி.மோகன், ஜி.கோபி, என்.கோகுலகிருஷ்ணன், ஏ.சரண்யா, வி.இன்பரசி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.*



தென்மேற்கு பருவமழையினை முன்னிட்டு, சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, அடையாறு மண்டலம், வார்டு 168, செட்டித்தோட்டம் பகுதியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (20.06.2023) பார்வையிட்டு ஆய்வு செய்து, கண்காணிப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். இந்நிகழ்வின்போது மண்டலக் குழுத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி, தலைமைப் பொறியாளர் (பொது) ராஜேந்திரன், மாமன்ற உறுப்பினர் மோகன்குமார் மற்றும் மண்டல அலுவலர் உள்பட பலர் உடனிருந்தனர்.

அண்ணாநகர் 101 வது வட்ட அவைத் தலைவர்

# எஸ்.முரளிகிருஷ்ணன் தாயார் எஸ்.கோவிந்தம்மாள் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



*சென்னை, ஜுன். 21 -*

*சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்கு பகுதி, 101 வது வட்டம், தமிழ்வேல் டாக்டர் கலைஞர் கருணாநிதி நற்பணி மன்ற முன்னாள் செயலாளரும், முன்னாள் பகுதிப் பிரதிநிதியான நினைவில் வாழும் எம்.சீனிவாசனின் துணைவியாரும், 101 வது வட்டக் கழக அவைத் தலைவர் எஸ்.முரளி கிருஷ்ணனின் தாயார் எஸ்.கோவிந்தம்மாள் (வயது 75) நேற்று 20.6.2023 செவ்வாய்கிழமை, மாலை 3 மணியளவில் இயற்கை எய்தினார்.*

*அம்மையாரின் மறைவு செய்தி அறிந்ததும் கழக நிர்வாகிகள், குடும்பத்தினர் அம்மையாரின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.*

*அம்மையாரின் இறுதி ஊர்வலம் இன்று (21.6.2023 புதன்கிழமை) மாலை 3 மணி அளவில், எண். 152/2, டி.பிளாக், 2 வது தெரு, ஆர்.வி.நகர், அண்ணாநகர் கிழக்கு, சென்னை 102, அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு வேலங்காடு இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை 101 வது வட்டக் கழகம் சார்பில் தெரிவித்துக்கொள்கிறோம்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### முனுஆதி
### ஜுன் 21 (2005)



**தாம்பரம் பகுதியில் கழகத்தை வளர்த்த முன்னோடிகளில் ஒருவர்.**

**நகர்மன்றத் தலைவராக, தமிழக சட்டப்பேரவை உறுப்பினராக நான்கு முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.**


**தமிழக சட்டப்பேரவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**மும்முனைப் போராட்டம், இந்தி எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட பல்வேறு அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கடையநல்லூர் கு.இராஜாமணி
### ஜுன் 21 (2009)



**தனது இளம் வயதிலேயே திராவிடர் கழகத்தில் ஈடுபாடு கொண்டு 1946ல் மதுரையில் நடைபெற்ற 'கறுப்புச் சட்டை மாநாட்டில்' பங்கேற்றவர். அதன்பின்னர் கழகத்தில் ஈடுபாடு கொண்டு கடையநல்லூர் நகர மாணவர் அணி அமைப்பாளராகவும், பின்னர் கடையநல்லூர் நகரக் கழகச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**நீதிகேட்டு நெடிய பயணத்தில் கலந்து கொண்டதுடன், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**“கடையநல்லூர் ராஜாமணி இன்று நேற்றல்ல, பல ஆண்டுகாலமாக கழக அரசின் சாதனைகளை சொந்த முயற்சியினால் துண்டு பிரசுரமாக அச்சடித்து மக்களிடம் வழங்கி பிரச்சாரம் செய்தவர்” என்று தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பெற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**